TNKR080000832013

**சார்பு நீதிமன்றம், குளித்தலை,**
**முன்னிலை : திரு.ஈ.முத்துசாமி, பி.ஏ. பி.எல்.,**
**சார்பு நீதிபதி, குளித்தலை**

**2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24-ம் தேதி செவ்வாய்க்கிழமை**

**அசல் வழக்கு எண்.114/2013**

**CNR No.TNKR08-000083-2013**

1. சந்தானம் (இறப்பு)*
2. ராஜராஜேஸ்வரி
3. ஆதிசேஷன்
4. ஸ்ரீவேதஜனனி ... வாதிகள்

**(இ.ம.எண்.2/2023 நாள் : 26.06.2024 உத்தரவின் படி*
*இறந்த முதல் வாதியின் வாரிசுகள் இரண்டு முதல் நான்கு வாதிகளாக*
*தாவாவில் சேர்க்கப்பட்டுள்ளார்கள்)*

***(இ.ம.எண்.3/2024 நாள் : 13.10.2024 உத்தரவின் படி*
*தாவா பிராது திருத்தம் செய்யப்பட்டுள்ளது)*

**/எதிர்/**

1. முத்துசாமி
2. மாரியாயி
3. லெட்சுமி
4. லோகநாதன்
5. தனலெட்சுமி
6. பிரகாஷ்
7. யுவராஜ்
8. மீனாட்சி ... பிரதிவாதிகள்

****(இ.ம.எண்.304/2019 நாள் : 06.01.2020 உத்தரவின் படி*
*மூன்று முதல் எட்டு பிரதிவாதிகள் அவசிய*
*தரப்பினர்களாக தாவாவில் சேர்க்கப்பட்டுள்ளார்)*

*****(இ.ம.எண்.114/2020 நாள் : 10.2.2020 உத்தரவின் படி*
*தாவா பிராது திருத்தம் செய்யப்பட்டுள்ளது)*

## தீர்ப்புரை

வழக்கு சொத்தினை மூன்று சமபாகங்களாக பிரித்து, அதில் இரண்டு முதல் நான்கு வாதிகளுக்கு ஒரு பாகத்தினை ஒதுக்கீடு செய்யக்கோரியும் மற்றும் வழக்கு சொத்தினை பொறுத்து மகசூல் ஆதாயத்திற்காகவும் இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 16.12.2013 |
| இறுதி விசாரணை நடைபெற்ற நாள் | : | 10.03.2026 |
| தீர்ப்புரை பகரப்பட்ட நாள் | : | 24.03.2026 |
| வாதிகளுக்காக | : | திரு.M.பரமசிவம் – வழக்கறிஞர் |
| முதல் பிரதிவாதிக்காக | : | திரு.N.மனோகரன் – வழக்கறிஞர் |
| இதர பிரதிவாதிகள் | : | நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லை என்பதால் தோன்றா தரப்பினராக கருதப்பட்டுள்ளார்கள். |

**1) திருத்தப்பட்ட பிராதின் சுருக்கம் :–**

ஒரு கருப்பா நாயக்கர் – முத்தம்மாளுக்கு இவ்வழக்கின் முதல் வாதியான சந்தானம், முதல் பிரதிவாதியான முத்துசாமி மற்றும் இரண்டாவது பிரதிவாதியான மாரியாயி ஆகியோர்கள் வாரிசுதார்கள். மேற்படி கருப்பா நாயக்கர் 1989ம் ஆண்டிலும், மேற்படி முத்தம்மாள் 10.05.2011–ம் ஆண்டிலும் எவ்வித விரும்புறுதி ஆவணம் எழுதி வைக்காமல் மேற்படியார்களை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துபோய்விட்டார்கள். இவ்வழக்கில் கண்ட ஒன்று முதல் மூன்று இலக்க சொத்துக்களை மேற்படி முத்தம்மாள் கடந்த 28.10.1985 மற்றும் 13.05.1985–ம் தேதிகளிட்ட கிரைய பத்திரங்களின் மூலம் கிரையம் பெற்றுள்ளார். ஒன்று முதல் மூன்று இலக்க சொத்துக்கள் மேற்படி முத்தம்மாளின் சுய சம்பாத்திய சொத்துக்கள் ஆகும். நான்கு, ஐந்து இலக்க சொத்துக்களை மேற்படி கருப்பா நாயக்கர் 29.09.1973–ம் தேதி அன்று கிரையம் பெற்றுள்ளார். மேற்படி கருப்பா நாயக்கர் மற்றும் முத்தம்மாள் இறந்துபோக, வழக்கு சொத்திற்கு முதல் வாதி மற்றும் ஒன்று, இரண்டு பிரதிவாதிகள் கூட்டு உரிமையாளர்கள் ஆவார்கள். கடந்த 2018–ம் ஆண்டு வரை மேற்படி வழக்கு

சொத்துக்களை கூட்டாக அனுபவம் செய்து வந்த நிலையில், முதல் பிரதிவாதியானவர் வாதியின் உரிமையினை முறியடிக்க வேண்டும் என்கின்ற நோக்கத்தில் சொத்தினை உரிமை மாற்றம் செய்ய முயற்சிக்க, அதனால் முதல் வாதியானவர் அவருக்குரிய மூன்றில் ஒரு பாகத்தினை கேட்டு கடந்த 20.11.2013–ம் தேதி அறிவிப்பு அனுப்ப அதற்கு பின்னிட்டும், முதல் பிரதிவாதியானவர் சொத்தினை பாகம் பிரித்துக்கொடுக்க முன்வரவில்லை. எனவே, வழக்கு சொத்தினை மூன்று சமபாகங்களாக பிரித்து, வாதிக்கு அதில் ஒரு பாகத்தினை ஒதுக்கீடு செய்யக் கோரியும் மற்றும் தவறான ஆதாயத்திற்காகவும் இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) முதல் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரை மற்றும் கூடுதல் எதிர்வழக்குரையின் சுருக்கம் :–**

**2 (1)** வாதியின் வழக்கானது செல்லத்தக்கதல்ல. வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல. முதல் பிரதிவாதியால் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளக்கூடிய சங்கதிகள் தவிர ஏனையவை உண்மையில்லை என மறுக்கப்படுகிறது. மேற்படி கருப்பா நாயக்கருக்கு, முத்தம்மாள் மற்றும் பெரியக்காள் ஆகியோர்கள் மனைவிகள் ஆவார்கள். மேற்படி முத்தம்மாள் வழியாக பிறந்தவர்களே முதல் பிரதிவாதி முத்துசாமி, இரண்டாவது பிரதிவாதி மாரியாயி மற்றும் வாதி சந்தானம் ஆகியோர்கள். மேற்படி கருப்பா நாயக்கரின் மற்றொரு மனைவியான பெரியக்காள் மூலம் பிறந்தவர்களே வீரமுத்து, மீனாட்சி மற்றும் மணி ஆகியோர்கள். மேற்படியார்களை அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காதது சட்டப்படி செல்லத்தக்கதல்ல. மேற்படி கருப்பா நாயக்கர், முத்தம்மாள், பெரியக்காள் ஆகியோர்கள் உயிருடன் இருந்த காலக்கட்டத்திலேயே ஊர் வழக்கப்படி முத்தம்மாள் பெயரில் இருந்த சொத்தினை பதிவு செய்யாத ஆவணம் மூலம் முதல் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுக்க, அதனை அவர் பெற்று வரி வகையறா செலுத்தி அரசு கடன் உதவி பெற்று அனுபவம் செய்து வருகிறார். மேற்படி சங்கதி இரண்டாவது பிரதிவாதிக்கும் தெரியும்.

**2 (2)** முதல் பிரதிவாதியின் சொத்துக்களை அபகரிக்க வேண்டி இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. முதல் வாதியும், முதல் பிரதிவாதியும் பாகம் பிரிந்த சொத்துக்களை தனித்தனியாக அனுபவம் செய்து வருகிறார்கள். முதல் வாதியானவர்

உண்மைகளை மறைத்தும், சேர்க்க வேண்டிய சொத்துக்களையும், சேர்க்க வேண்டிய தரப்பினர்களையும் சேர்க்காமல் வழக்கு தாக்கல் செய்துள்ளது சட்டப்படி செல்லத்தக்கதல்ல. தாவா சொத்துக்களை நான்கு சமபாகங்களாக பிரித்து, அதில் 1/3 பங்கினை வாதிக்கு ஒதுக்க வேண்டுமென கோருவது ஏற்கத்தக்கதல்ல. பரிகாரம் விபரம் சரியல்ல. திருத்தல் உத்தரவுப்படி மூன்று முதல் ஏழு பிரதிவாதிகள் சேர்க்கப்பட்டும் அவர்களுக்குரிய பாக உரிமை பற்றி வாதி குறிப்பிடவில்லை. எனவே, வாதியின் வழக்கினை முதல் பிரதிவாதியின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என கோரியுள்ளார்.

**3) வழக்குரை, எதிர்வழக்குரை வழக்கு கோப்பில் உள்ள சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் இந்நீதிமன்றம் பின்வரும் எழுவினாக்களை வனைந்திருந்தது.**

1 தாவா சொத்துக்கள் ஏற்கனவே பாகம் பிரிக்கப்பட்டதா?

2 தாவாவில் தேவையான தரப்பினர்கள் சேர்க்கப்படவில்லை என்பது சரியா?

3 தாவாவில் வாதி கோரியவாறு பாகப்பிரிவினை கிடைக்கத்தக்கதா?

4 வாதிக்கு கிட்டும் இதர தீர்வு என்ன?

4) வாதிகள் தரப்பில், மூன்றாவது வாதி ஆதிசேஷன் வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, அவர் மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஒரு லட்சுமி என்பவர் வா.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டு, அவர் மூலமாக வா.சா.ஆ.8 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில், முதல் பிரதிவாதி முத்துசாமி பி.வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். பிரதிவாதிகள் தரப்பில் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5) வாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவருடைய வாதுரையில், வாதிகள் அவர்களுடைய வழக்கினை தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்கள் வாயிலாக நிருபித்துள்ளதால், வாதிகள் கோரியுள்ள பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என வாதிட்டார்.

6) முதல் பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவருடைய வாதுரையில், வாதிகள் அவருடைய வழக்கினை தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்கள் வாயிலாக நிரூபணம் செய்யவில்லை என்பதால், வாதிகளின் வழக்கை முதல் பிரதிவாதியின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

7) **ஒப்புக்கொள்ளப்பட்ட பொருண்மைகள் :–**

தரப்பினர்களின் உறவு முறை குறித்த சங்கதி, மேற்படி கருப்பா நாயக்கர், முத்தம்மாள், பெரியக்காள் ஆகியோர்கள் இறந்துபோய்விட்டார்கள் என்கின்ற சங்கதி ஆகியவைகளை தரப்பினர்கள் ஒப்புக்கொண்டுள்ளபடியால், மேற்படி ஒப்புக்கொள்ளப்பட்ட பொருண்மைகளை விவாதிக்க வேண்டியதில்லை.

8) **எழுவினா ஒன்றிற்கான தீர்வு :–**

***(1) தாவா சொத்துக்கள் ஏற்கனவே பாகம் பிரிக்கப்பட்டதா?***

வாதி அவரது வழக்குரையில் பாகப்பிரிவினை பரிகாரம் கோரியுள்ள நிலையில், முதல் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் வழக்கு சொத்து சம்மந்தமாக கருப்பா நாயக்கர், முத்தம்மாள், பெரியக்காள் ஆகியோர்கள் உயிருடன் இருந்த காலகட்டத்தில் ஊர் பெரியவர்கள் முன்னிலையில் வழக்கு சொத்துக்களை பாகம் பிரித்து விட்டதாக கூறப்பட்டுள்ளது. அவ்விதத்தில், முதல் பிரதிவாதி கூறுவது போன்று ஊர் பெரியவர்கள் முன்னிலையில் கருப்பா நாயக்கர், முத்தம்மாள், பெரியக்காள் ஆகியோர்கள் உயிருடன் இருந்த காலகட்டத்தில் பாகம் பிரிக்கப்பட்டது என்கின்ற சங்கதியை நிரூபணம் செய்ய வேண்டிய சுமையானது முதல் பிரதிவாதியை சேர்ந்தது. மேற்படி சங்கதியை பொறுத்து பி.வா.சா.1 அவரது முதல் விசாரணையில், ***"ஊர்காரர்கள் முன்னிலையில் எனது தாயார் மறுபயனுக்காக எனக்கு சொத்தை எழுதிக்கொடுத்தாக கூறியது உண்மையாக இருக்கும் பட்சத்தில் ஊர்காரர்களின் பெயரை வழக்கில் தெரிவித்திருப்பேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துகள் அனைத்தும் எனது தாயார் முத்தம்மாள் பெயரில் தான் உள்ளது என்றால் சரியல்ல"*** *என கூறியுள்ளார்.* மேலும், முதல் பிரதிவாதி எதிர்வழக்குரையில் கூறியுள்ள சங்கதிக்கு ஆதரவாக ஆவணங்கள் எதனையும் தாக்கல் செய்யவில்லை. எனவே, முதல் பிரதிவாதி கூறுவது போன்று வழக்கு சொத்துக்களை பொறுத்து ஏற்கனவே பாகம் பிரிக்கப்பட்டுள்ளது என்கின்ற சங்கதியை

முதல் பிரதிவாதி நிரூபணம் செய்யவில்லை. இவ்வாறாக, எழுவினா ஒன்றிற்கு விடை காணப்படுகிறது.

**9) எழுவினா இரண்டிற்கான தீர்வு :-**

***(2) தாவாவில் தேவையான தரப்பினர்கள் சேர்க்கப்படவில்லை என்பது சரியா?***

முதல் வாதி அவரது வழக்குரையில், வாதியின் தகப்பனாருக்கு முத்தம்மாள் என்கின்ற மனைவி மூலம் பிறந்தவர்களே வாதி மற்றும் ஒன்று, இரண்டு பிரதிவாதிகள் என கூறப்பட்டுள்ள நிலையில், முதல் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில், மேற்படி பெரியக்காளுக்கு வீரமுத்து, மீனாட்சி, மணி ஆகியோர்கள் வாரிசுதாரர்கள் என்றும், மேற்படியார்களை இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்கின்ற சங்கதியை பொறுத்து, மேற்படி வீரமுத்துவின் மனைவி லட்சுமி, அவரின் மகன் லோகநாதன் மற்றும் மேற்படி வீரமுத்துவின் சகோதரரான மணி இறந்துபோக, மேற்படி மணியின் மனைவி தனலட்சுமி, பிரகாஷ், யுவராஜ் ஆகியோர்களையும், மேற்படி மீனாட்சியையும் அசல் வழக்கில் பிரதிவாதிகளாக சேர்த்துள்ளபடியால் மேற்படி அவசிய தரப்பினர்களை சேர்க்கவில்லை என்கின்ற வினா எழவில்லை. இவ்வாறாக, எழுவினா இரண்டிற்கு விடை காணப்படுகிறது.

**10) எழுவினா மூன்றிற்கான தீர்வு :-**

***(3) தாவாவில் வாதி கோரியவாறு பாகப்பிரிவினை கிடைக்கத்தக்கதா?***

**10 (1)** முதல் வாதி அவரது வழக்குரையில், ஒன்று முதல் மூன்று இலக்க சொத்துக்கள் மேற்படி முத்தம்மாளுக்கு கடந்த 28.10.1985-ம் தேதிய கிரையப்படி பாத்தியப்பட்டதாக கூறியுள்ளார். மேற்படி சங்கதியை முதல் பிரதிவாதி தரப்பில் மறுக்கப்படவில்லை. கடந்த 28.10.1985-ம் தேதியிட்ட வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தை பரிசீலனை செய்த வகையில், மேற்படி ஒன்று முதல் மூன்று இலக்க சொத்துக்கள் மேற்படி முத்தம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்கின்ற சங்கதியை வா.சா.ஆ.3 ஆவணத்தின் வாயிலாகவும், இவ்வழக்கில் நான்கு மற்றும் ஐந்தாவது இலக்க சொத்துக்கள் வாதியின் தகப்பனாரான கருப்பா நாயக்கருக்கு பாத்தியப்பட்டது என்கின்ற சங்கதியையும் அறிந்து கொள்ள முடிகின்றது. வா.சா.ஆ.2 ஆவணத்தின் படி வாதி மற்றும் ஒன்று, இரண்டு பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

வாதியானவர் வழக்கு சொத்தில் கூட்டு பங்கு உரிமையாளர் என்பதால் அவருக்குரிய பாகத்தினை பிரித்துக் கொடுக்ககோரி அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. முதல் பிரதிவாதி தரப்பில், வாதி மற்றும் ஒன்று, இரண்டு பிரதிவாதிகளின் தாயார் வழக்கு சொத்துக்களை பொறுத்து முதல் பிரதிவாதிக்கு சாட்சிகள் முன்னிலையில் பிரதிபிரயோஜனம் பெற்றுக்கொண்டு பதிவு செய்யப்படாத ஆவணத்தின் மூலம் சொத்தினை ஒப்படைவு செய்ததாக கூறியிருப்பினும், மேற்படி சங்கதியை நிரூபணம் செய்ய வேண்டிய சுமையானது முதல் பிரதிவாதியையே சார்ந்ததாகும். அவ்விதத்தில், பி.வா.சா.1 அவரது குறுக்கு விசாரணையில், ***"எந்தெந்த சொத்துக்களை பொறுத்து எனது தாயார் அப்படி எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் எனது அம்மா பெயரில் வாங்கிய சொத்து எனது பெயரில் வாங்கிய சொத்து ஆகியவைகளை எழுதிக்கொடுத்தார். நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் எனது பெயரில் சொத்துக்கள் எதுவும் வாங்கியதாக குறிப்பிடாமல் தற்பொழுது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தாயார் கிரையம் வாங்கியதாக கூறக்கூடிய இரண்டு ஆவணங்களை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்க்கவில்லை. யாரிடமாவது படித்து காண்பிக்க சென்னேனா என்றால் இல்லை. மேற்படி வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டாவது மேற்படி ஆவணங்களை படித்து பார்த்தேனா என்றால் இல்லை. எனது தாயார் இரண்டு கிரையம் பத்திரம் மூலமாக கிரையம் பெற்றுள்ளார். மேற்படி இரண்டு பத்திரங்களிலும் நான் பணம் கொடுத்து கிரையம் வாங்கியதாக குறிப்புகள் எதுவும் இல்லை என்றால் சரிதான்"*** என கூறியுள்ளார்.

10 (2) மேலும், ***"ஊர்காரர்கள் முன்னிலையில் எனது தாயார் மறுபயனுக்காக எனக்கு சொத்தை எழுதிக்கொடுத்தாக கூறியது உண்மையாக இருக்கும்பட்சத்தில் ஊர்காரர்களின் பெயரை வழக்கில் தெரிவித்திருப்பேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துகள் அனைத்தும் எனது தாயார் முத்தம்மாள் பெயரில் தான் உள்ளது என்றால் சரியல்ல"*** *என கூறியுள்ளார்.* எதிர்வழக்குரையில் ஒரு சங்கதியை தெரிவித்தாலேயே அதனை ஒரு சாட்சியமாக கருதிகொள்ள இயலாது. எதிர்வழக்குரையில் கண்ட சங்கதியினை சாட்சி மற்றும் சான்றாவணங்கள் வாயிலாக முதல் பிரதிவாதி நிரூபணம் செய்யவில்லை. எனவே, வழக்கு சொத்தானது கூட்டுக்குடும்ப சொத்து என்பதாலும், வழக்கு சொத்தில் வாதிக்குரிய பாகத்தினை பாகம் பிரித்துக்கொடுக்ககோரி அறிவிப்பு அனுப்பபட்ட சங்கதியையும், அதன் பின்னிட்டும் முதல் பிரதிவாதியானவர், முதல் வாதிக்குரிய

பாகத்தினை பிரித்துக் கொடுக்கவில்லை என்கின்ற சங்கதியையும் வாதிகள் தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்கள் வாயிலாக நிரூபணம் செய்துள்ளதால், வாதிகள் கோரிய பாகப்பிரிவினை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என எழுவினா மூன்றிற்கு விடை காணப்படுகிறது.

**11) எழுவினா நான்கிற்கான தீர்வு :–**

***(4) வாதிக்கு கிட்டும் இதர தீர்வு என்ன?***

ஒன்று முதல் மூன்று எழுவினாக்கள் முதல் வாதிக்கு ஆதரவாக முடிவு செய்யப்பட்டுள்ளதாலும், தவறான ஆதாயத்தை பொறுத்து வாதிகள் தனியாக வழக்கு தாக்கல் செய்வதற்கு உரிமை அளித்தும், இவ்வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில் கொண்டும் வழக்கின் செலவுத் தொகைகளை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் எழுவினா நான்கின்கு விடை காணப்படுகிறது.

**12) முடிவாக,**

**(அ)** வாதிகளின் வழக்கானது அனுமதிக்கப்படுகிறது.

**(ஆ)** வழக்கு சொத்தினை நலந்திகடு கலந்து மூன்று (3) சமபாகங்களாக பிரித்து, அதில் ஒரு (1) பாகத்தினை இரண்டு முதல் நான்கு வாதிகளுக்கு ஒதுக்கீடு செய்து முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.

**(இ)** இரண்டு முதல் நான்கு வாதிகள் மகசூல் ஆதாயத்திற்காக தனியாக வழக்கு தாக்கல் செய்ய அனுமதி அளித்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

**(ஈ)** செலவுத் தொகை இல்லை.

இத்தீர்ப்புரை, என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 24–ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MUTHUSAMY ESWARAN
Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.03.24 17:13:59 +0530

சார்பு நீதிபதி,
குளித்தலை.

**வாதிகள் தரப்பு சாட்சிகள் :–**

வா.சா.1 – ஆதிசேஷன் (மூன்றாவது வாதி)
வா.சா.2 – லெட்சுமி

**வாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :-**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 28.10.1985 | கிரையப்பத்திரம் |
| வா.சா.ஆ.2 | 13.05.1985 | கிரையப்பத்திரம் |
| வா.சா.ஆ.3 | 29.12.1973 | கிரையப்பத்திரம் |
| வா.சா.ஆ.4 | 20.11.2013 | வழக்கறிஞர் அறிவிப்பு |
| வா.சா.ஆ.5 | -- | அஞ்சலக இரசீது |
| வா.சா.ஆ.6 | | சந்தானம் என்பவரின் வாரிசு சான்று |
| வா.சா.ஆ.7 | | சந்தானம் என்பவரின் இறப்பு சான்று |
| வா.சா.ஆ.8 | | வா.சா.2-ன் ஆதார் நகல் |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் :-**

பி.வா.சா.1 – முத்துசாமி (முதல் பிரதிவாதி)

**பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :-** இல்லை

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.03.24 17:13:54 +0530

சார்பு நீதிபதி,
குளித்தலை.